M.U.A.C.'s

விகடயோகி

டைரக்ஷன்

K. சுப்ரமண்யம் B.A., B.L.

நந்தினி ரிலீஸ்

BALU BROS

NANDHINI PICTURES

10, PUGALIA PILLAY STREET,

Teppakulam Post, :: TRICHINOPOLY.

கதைச் சுருக்கம்

புத்தகம் வாங்க மூர்மார்க்கட்டுக்குச் சென்ற வரதராஜன் தற்செயலாக அங்கே அதே புத்தகத்தை வாங்க வந்த வாஸந்தியைச் சந்திக்கிறான். அச்சமயம் வரதராஜன் பர்ஸை ஒரு பையன் அபேஸ் செய்ய அதை ஒரு போலீஸ் ஜவான் பார்த்து அவனைப் பிடித்துக் கொண்டு வரதராஜனையும் வாஸந்தியையும் தம்பதிகள் என்று எண்ணிக் கேஸை ரிஜிஸ்தர் செய்ய வாஸந்தி வேறு வழியின்றி அவ்வாறே கையொப்பமிடுகிறாள். இத்தமாஷ் சம்பவம் இருவர் உள்ளங்களிலும் காதலை விதைத்து விடுகிறது. இருவரும் மறுநாள் மாலை பார்க்கில் சந்திக்கின்றனர்.

வரதராஜனின் சகோதரி பானுவின் கணவனான "இன்டர்நேஷனல் பாங்க்" காரியதரிசி மதனகோபாலிடம் குமஸ்தா வேலைக்குச் சேருகிறாள். வாஸந்தி டெல்லிக்குச் சென்ற வரதராஜனுக்கு காதற் கடிதங்கள் எழுதியவண்ணம் இருக்கிறாள். ஒரு நாள் அவள் தகப்பனார் அவளுக்காக ஒரு லீவ் லெட்டர் எழுதிக் கவரில் போடும் போது அவள் வரதராஜனுக்கு எழுதி வைத்திருந்த காதற் கடிதத்தை காரியதரிசியின் கவரிலும் லீவ் லெட்டரை வரதராஜனின் கவரிலும் தவறுதலாகப்போட்டு அனுப்பி விடுகிறாள். காரியதரிசி அதைக் கண்டு நம்பி பானுவை ஏமாற்ற வேலையாளின் யோசனைப்படி வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுவிட்ட யோகி மாதிரி நடிக்க பானுவும் அதை நம்புகிறாள்.

புரொபஸர் கிட்டப்பா "அடாமிக் வாய்ஸ் எஸென்ஸ்" போன்ற அற்புதங்களை சிருஷ்டிக்கப் படாதபாடு படுகிறார். ஆனால் அவர் மனைவி அவரைப் படாதபாடு படுத்துகிறாள். ஒரு நாள் அவரிடம் மூன்று ஆயிர ரூபாய் நோட்டுகள் இருந்ததைக் கண்ட அவள் அவற்றை மாற்ற எண்ணி பாங்கிக்கு வாஸந்தியிடம் செல்லுகிறாள். காதல் பித்துக்கொண்ட மதனகோபாலின் சரஸ் வார்த்தைகள் வாஸந்திக்குப் புரியவில்லை. ஆகவே ஒரு காதற் கடிதம் எழுதி அவளிடம் அனுப்புகிறார். அச்சமயம் மிருதுபாஷிணி நோட்டுகளை மாற்ற அவ்விடம் வர அதை வாஸந்தி எடுத்துக்கொண்டு காஷியரிடம் செல்கிறாள். மதனகோபாலின் காதற் கடிதம் தவறுதலாக மிருதுபாஷிணியிடம் சேருகிறது. அவள் அதற்கிணங்கி மதனகோபாலைப் பேட்டி காண அவர் தவற்றை உணர்ந்து மன்னிப்ப அவள் கோபத்துடன் வெளியேறுகிறாள்.

டெல்லியிலிருந்து வந்த வரதராஜன் மதனகோபால் வாஸந்திக்கு எழுதிய கடிதத்தைக் கண்டு வாஸந்தியைத் தூற்றுகிறான்.

இதற்குள் மதனகோபாலின் பைத்தியத்தைத் தெளிவிக்க வந்த மலையாள மந்திரவாதிக்குத் தப்பிச் சென்றால் போதுமென்றாகிவிட்டது. அவருக்கு சிகிச்சை செய்ய வந்த டாக்டர், பானுவிடம் காதல் வார்த்தையாட மதனகோபால் யாவற்றையும் மறந்து டாக்டரை அடித்து வீழ்த்த யாவரும் பைத்தியம் முற்றிவிட்டதென எண்ணி பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்புகின்றனர். படாத பாடு பட்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளிவந்த மதனகோபாலைப் போலீஸ் தேடிவருகிறது. பானு மதனகோபாலைக் கண்டு உள்ளம் பூரிக்கிறாள். அவர் எல்லா உண்மைகளையும் கூறி மன்னிப்புக் கேட்கிறார். போலீஸிடமிருந்து பெண் வேஷம் போட்டு தப்பிக்கிறார். பாங்கியில் மானேஜிங் டைரக்டர் விசாரணையில் உண்மை வெளியாகிறது. "ஒரு லவ் லெட்டர்" ஒரு லீவ் லெட்டர் லவ் லெட்டர் மாஸ்டருக்குப் போய்விடுகிறது. லீவ் லெட்டர் லவருக்குப் போய்விடுகிறது." இச் சிறு தவற்றால் ஏற்பட்ட தமாஷ்களைக் கண்டு யாவரும் சிரிக்கின்றனர்.

சுபம்! மிகுதியை வெள்ளித் திரையில் காணுங்கள்.

பாட்டுகள்

ராகம் :	மதனகோபால்	தாளம் :
ராகமாலிகை	(பி. யு. சின்னப்பா)	ஆதி

ஜோன்புரி

என்னை அறிந்தேனே—இனி நான்
ஏகாந்தம் ஆனேனே (என்னை)
தன்னை மறந்து தலைகீழாய் நில்லாமல்
என்னை மறந்து உனை நினைந்திட்டபோது (என்னை)

பிலஹரி

மண்ணையும் பெண்ணையும் பொன்னையும் நினைந்து
கண்ணிருந்தும் காணா குருடனாய் அலைந்து (நான்)
பண்ணிய பாபங்கள் பலவும் அகன்று (நான்)
மண்ணில் உன் அருள் ஒளி—மகிமை தனைக்கண்டு (என்னை)

லதாங்கி

தாயுடன் தந்தையும் தாரமும் மக்களும்
நேயமாய் கொண்டவை நிலையல்லவே
பேயுலகாம் இதை பொய் என அறிந்தே
நீ யல்லால் நானில்லை எனும் நிலையுணர்ந்தேன் (என்னை)

ராகம்: மதனகோபால் தாளம்:

செஞ்சுருட்டி (பி. யு. சின்னப்பா) ஆதி

உலக வாழ்வு சதமா—அதை நாம்
உறுதி கொள்ளத் தகுமா—சுகமா (உலக)
நிலை இல்லாத அலை நீர்குமிழ் போலே
நீடும் வானவில் மின்னல் போலே (உலக)

தொகையறா

அந்தரத்தில் பறவை என—ஆழியிடைத்தவளை என
அழிக்க வந்த விக்ஞான அமைப்போர் பக்கம்
தந்திரத்தால் யந்திரத்தால் சண்டையிடும் புதிய முறைச்
சாதனங்கள் தாக்கும் உயிர்ச்சாவோர் பக்கம்
விந்தைமிகு கண்வேறு கால்வேறு கைவேறாய் வெட்டுண்டு
வீழ்ந்த மக்கள் வேறோர் பக்கம்
சோந்த மனையாட்டி மக்கள் சுற்றமுற்றம் தனையிழந்தோர்
துயரமதைக் காண அந்தோ துக்கம் துக்கம்-துக்கம்.

பாட்டு

பெண்ணொடு மண்ணினை பொன்னை அன்போடு
பேணுவதால் வரும் கேடு
எண்ணத்தின் இச்சையன்றோ—விடுவிடு நீ
ஈசனையே மனம் நாடு—காணும் (உலக)

ராகம்: பானு தாளம்:

தேச் (டி. ஆர். ராஜகுமாரி) ஆதி

கூவுது பார்—கூவுது பார்
கோகிலமே—கூ கூ கூ ஆ ஆ
காதிற் கானந்த கானமிர்தம் (கூவுது)
தாவி தென்றல் வீசுதிங்கே பார்
தன்னை மீறிய இன்பம் தரும் (கூவு
மதுரமான மாலை நேரம்
மதுகரங்கள் செய் ரீங்காரம்
மாமலர் வாசம் வீசும் ஹா
மனோரம்யமே ஆனந்தமே
ஆ காதிற்கானந்த கானமிர்தம். (கூவுது)

இங்கிலீஷ் : பானு ரம்பா :

மெட்டு (டி. ஆர். ராஜகுமாரி) ட்யூன்

பலே சபாஷ்—பலே சபாஷ்
பந்தம் தவிர்த்துமே பறந்தெங்குமே
திரிந்திங்கு பாடும்
பறவை போல்—பறவை போல்
இன்றெங்கும் ஓடியே வானம்பாடி என
கானம் பாடுவேனே்
அவனி மீதிலென்னை
நிகரே யாருமில்லை
லலல்லாலலல் லலல்லாலலல் லலல்லாலலல்லா
ஆசையானேன்—ஆசையானேன்
ஆசையானேன்—ஆசையானேன்
ஐ லவ்—ஐ லவ்
ஒன்லி யூ அண் நோ ஒன் எல்ஸ் கேன் ஐ லவ்.

ராகம் : மதனகோபால் தாளம் :

மாண்டு (பி. யு. சின்னப்பா) ஆதி

பஜராம் பஜராம்—போலோ ராம ராம ராம்
ஸீதா ராம ராம்—தாரே நாம நாம நாம் (பஜராம்)
பஞ்சதத்வகா சரீர பனயா—அமர ஆத்ம ஸமஜாயா
பால ஜவானி புடாபா ஆயா—பரிவர்த்தன திக் லாயா (போ)
சங்கராசாரிய புத்தரோ பாயே—ராம நாமகீ துன் லகாயே
ஜோஸு மீரே முக்தி கோஜாயே—மாதா பிதா ஸுத பாந்தவ நாரீ
ஸ்வாரத்தகி ஸப் துனியா ஸாரீ—ஸாத்ந ஆயே துனியா கேதனதாம் (போலே)
ராமாநுஜ இஸ்ரா நபிமே—குச் பேத் நஹிஹை பாயி
ஏக் பிரம்ம எ துனியா பனயி—ஸப் ஜக வியாபக ஷ்யாம்
வியாபக ஹை கன ஷ்யாம் (போலோ)

ராகம் : மதனகோபால் தளேம் :

நாதநாமக்கிரியா (பி. யு. சின்னப்பா) ஆதி

அண்ட புவனங் கொண்ட நிட்டை
ஸாதிக்க வரியா முண்ட முழுதும் பட்ட கட்டை
மணித்தேரோடு கண்குகை யானைக் குதிரை ஒட்டை
வைத்தேறி வாழும் சண்டி உடலுமோ லொடலொட்டை
மின்னார்கள் இன்பம்கொண்டு மயங்கி காமவெட்டை
நஞ்சுண்டு சாமிரெண்டு கெட்ட வினைபொய் மட்டை
அவனுக்கந்த தொண்டாசை கால் ரெண்டும்தான் குட்டை
விழிகுருடன் நண்டாளந்த நாளியவர்
நமக்கேன் காண் அந்த சேட்டை
போவோம் குணங்குடிக் கெல்லோரும்

ராகம் : மதனகோபால் தாளம் :

நாதநாமக்ரியா (பி. யு. சின்னப்பா) ஆதி

கொங்கும் நுரையு மாகப் பொங்கும்
காமக்கடலுள் முங்கும் பாவியுடலைச்
சொங்கும் சொரி சிறங்கும் நங்கும்
நமநமெனச் சிங்கும் நரம்பும் தோலும் தொங்கும்
மினுமினுப்பும் மங்கும் இல்லந்துறந்த
சிங்கங்களுக் கில்லைங்காணும் பங்கம்
மேனிஉயர்ந்த தங்கமயமாய் மின்றிலங்கும்
அவர்களுக் கன்றோ தங்கும் சாயுச்சிய பதம் தங்கும்
அதில் நமக்கு பங்குதந்து உதவிப் பராபரம் அளிக்கவே
(போவோம்)

ராகம் : வாஸந்தி தாளம் :

மிஸ்ரமாண்டு (பி. எஸ். சரோஜா)

அதிர்ஷ்டசாலியே என்னைப்போல் இல்லை வேறே
நாளைக்கே துரையவர்—நாளைக்கே துரை வருவார்
பார் நானே—பார் நானே—இங்கே
கலெக்டர் மனைவி ஆகுவேன்
எனை வந்து பலபேர் காண்பரே (அ

ஐ வில் அடெண்ட் தி மீட்டிங்
அங்கே நான் தலைமை வகிப்பேன்
சொந்தமாய் உயர்ந்த பங்களா வாங்குவேன்
ரேடியோ கிராமபோன் மை லாவும்

ராகம் :	வாஸந்தி, வரதராஜன், பானு	தாளம்
பஹாடி	(சரோஜா, குமரேசன், ராஜகுமாரி)	தாத்ரா

அன்பே எல்லாம் தருமே
பூவிலே பொய்யிலா
பொய்யிலா புனிதமாம்

(வாஸந்தி பி. எஸ். சரோஜா)

அன்பே எல்லாம் தருமே
யோகமும் போகமும்
சொர்க்கமா லோகமும்

(வரதராஜன் எஸ். எம். குமரேசன்)

அன்பே எல்லாம் தருமே
சாந்தமே ஏகாந்தமே
காந்தமே போலுமே

(பானு. டி. ஆர். ராஜகுமாரி)

அன்பே எல்லாம் தருமே
சுகிர்தமாகு மிதே
சோர்விலா சந்தோஷமே! (அன்பே)

ராகம் :	புரொபஸர்	தாளம் :
சுபபந்துவராளி	(எம். கே. தியாகராஜபாகவதரின் குரல்)	ஆதி

முகுந்தனே நந்தன் மைந்தனே
...ளீ கான பரமானந்தனே (முகுந்தனே)
...மா பிருந்தாவனச் சந்த்ரனே
...ணே என்னை வந்தாள் யாதவேந்த்ரனே (முகுந்தனே)
தளர் நடைகொள ராதை குளிர்சோலைதோறும்
தவழ் யமுனை பாயும் தடம்தோறும் நொந்து
தளிர் மேனி வாடி—தளர்ந்துன்னைத் தேடி
தன்னை மறந்துபாட—அவள் எதிரில்வந்த (முகுந்தனே)

விகடயோகி

நடிகர்கள்

மதனகோபால்	....	பி. யு. சின்னப்பா
பானு	....	டி. ஆர். ராஜகுமாரி
வாஸந்தி	....	பி. எஸ். சரோஜா
வரதராஜன்	....	எஸ். எம். குமரேசன்
அப்புபிள்ளை	....	ஆள்வார் குப்புசாமி
மிருதுபாஷிணி	....	டி. எஸ். தமயந்தி

தயாரிப்பு :-

மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ் கார்ப்பரேஷன்

ஸ்டுடியோ :- சோபனசலா

டைரக்ஷன் :- கே. சுப்ரமண்யம், பி. ஏ. பி. எல்.,

எதிர்பாருங்கள் !!

நந்தினியின் புதிய நக்ஷத்திரம் தோன்றும்

"வைதேகி"

புண்ய புராண படம்

கைவசம்

ஸேவாசதனம்	நவீனசதாரம்
வனராஜகார்ஸான்	சக்திமாயா
சோகாமேளர்	துளசி பிருந்தா
பஞ்சாமிர்தம்	பிரேம் சாகா (Hi
காளமேகம்	வால்மீகி
அனந்த சயனம்	(தெலுங்கு)

Printed at The Bharathmata Press, 39, Anderson Street,
G. T., Madras. Q. H. MS. 174—15 000 Cs.